1972 ஆகஸ்ட் 25]

அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தடையாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செஸ் நிதியை எதிர்பார்த்து ஏற்கனவே எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை. புதிதாகச் சேரும் ஒன்று. இதன்மூலம் அதிக வாய்ப்புகளுக்கு வழிவகை செய்யப்படுகிறது.

தூ நீர் வழங்கல் மற்றும் துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் திட்டங்களுக்காக முறையே ரூ. 32,72,950-ம் ரூ. 9,26,000-ம் பயன்படுத்திக் கொள்வதற்காக கோவை மாவட்ட ஆட்சியருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

பேரூராட்சிகள்

*332. வினா.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த (1) வள்ளல் நதி, (2) மயிலாடும் பாறை, (3) நரசிங்கபுரம் இந்த மூன்று பேரூராட்சி மன்றங்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் ஊராட்சி மன்றங்களாக மாற்ற வேண்டும் என்று அந்த பேரூராட்சி மன்றங்களில் இருந்து தீர்மானங்கள் போட்டு அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனின், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) போதிய வருவாய் இல்லை என்ற காரணத்திற்காக வள்ளல் நதி பேரூராட்சி 15–2–1972 தேதி 14-வது தீர்மானத்தில் வள்ளல் நதி பேரூராட்சியை வள்ளல் நதி, ஆத்தங்கரைப்பட்டி, எட்டப்பராஜபுரம் என்று மூன்று ஊராட்சிகளாக பிரிக்கும்படியும், மயிலாடும்பாறை பேரூராட்சி 24–3–1972 தேதி 99-வது தீர்மானத்தில் மயிலாடும் பாறையை 10 ஊராட்சிகளாக பிரிக்கும்படியும், நரசிங்கபுரம் பேரூராட்சி 23–10–1970ந் தேதி 187-வது தீர்மானத்தில் நரசிங்கபுரத்தை ஊராட்சியாக மாற்றும்படி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது அது சம்பந்தப்பட்ட மற்றவரிடமிருந்தோ இத்தீர்மானங்களின் மேல் செயல் குறிப்புகள் வரவில்லை.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, வள்ளல் நதி, மயிலாடும் பாறை, நரசிங்கபுரம் இந்த மூன்று பேரூராட்சி மன்றங்களின் பரப்பளவு அதிகமாகும். ஒரு உறுப்பினர் 15 மைல், 20 மைல் கடந்து ஊராட்சி மன்றக் கூட்டத்திற்கு வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே மேலும் அங்கு சிறுசிறு கிராமங்களாக, 10, 15 வீடுகள் இருப்பதால்

ஆங்காங்கு பிரித்தால் நல்ல வழியாக இருக்கும் என்றும், ஆகவே, அதைச் சிறுசிறு ஊராட்சி மன்றங்களாகப் பிரிப்பதற்கு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, முதலிலே பேரூராட்சியாக வேண்டுமென்று விரும்புகிறார்கள். பேரூராட்சியாக ஆனதற்குப்பிறகு அதில் ஏற்படும் சங்கடங்களைப் பார்த்து ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் வள்ளல் நதி 16 சதுர மைல் பரப்பளவும், நரசிங்கபுரம் 50 சதுர மைல் பரப்பளவும், மயிலாடும்பாறை 100 சதுர மைல்கள் பரப்பளவும் உள்ளதாக இருப்பதால் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன. இதில் வள்ளல் நதி பேரூராட்சியின் உத்தேச ஆண்டு வருமானம் 25,000 ரூபாய். ஆண்டு ஒன்றிற்கு அலுவலர்களின் சம்பளச் செலவு 22,500 ரூபாய் ஆகிவிடுகிறது. இவ்வளவு போனதிற்குப் பிறகு வேறு எதுவும் செய்யமுடியாது. நரசிங்கபுரம் பேரூராட்சியின் உத்தேச வருமானம் 49,000 ரூபாய், மயிலாடும்பாறையின் உத்தேச வருமானம் 70,000 ரூபாய். எனவே இதை மாற்றியமைப்பது நல்லது என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும், மற்ற அலுவலரிடமிருந்தும் இதுபற்றிய செயற் குறிப்புகள் வந்தபிறகுதான் அதன்மீது அரசு தக்க நடவடிக்கை மேற் கொள்ளும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் குறிப்பிட்ட மயிலாடும் பாறை வருஷநாடு பகுதி, மலைப்பகுதியாக இருக்கிறது. அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல 100 சதுர மைல் பரப்பு இருப்பதால் அதைப் பிரிப்பதற் கான உத்தேச நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, இப் போது பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற் குறிப்புகள் வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(Thiru K. S. Kothandaramiah rose)

Mr. DEPUTY SPEAKER : This question relates to a remote part in Madurai district. I wonder what supplementary the hon. Member can put.

* 333. வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கரூர் வட்டம், புலியூர் கிராமப் பஞ்சாயத்து நகரப் பஞ்சாயத்தாக மாற்றி அமைக்குமாறு பொதுமக்களிடமிருந்து 1972 மார்ச்சு மாதத்தில் கோரிக்கை ஏதேனும் வந்ததா?